

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஜூலை 08, 2021 | புரட்சி 20 | முழக்கம் 19 | விலை: ரூ.3.00


## சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம்

# அய்.அய்.டி.யில் ஜாதியப் பாகுபாடுகளை விசாரணைக்குட்படுத்துக!

*சென்னை அய்.அய்.டி.களில் நடக்கும் ஜாதியப் பாகுபாடுகள் குறித்து தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் அடங்கிய குழு விசாரணை நடத்தக் கோரி திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பில் அய்.அய்.டி. வளாகம் அருகே 5.7.2021 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பின்னர் அய்.அய்.டி. பதிவாளர் மற்றும் 'டீன்' ஆகியோரை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப் பட்டது.*

சென்னை அய்.அய்.டி. பார்ப்பன மனுவாதிகளின் கோட்டையாக செயல்பட்டு வருகிறது. பட்டியலின - பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், பார்ப்பனிய மேலாதிக்கம் திணிக்கும் பாகுபாடுகளால் மன உளைச்சலுக்கு உள்ளாகி, பாதியில் படிப்பை விட்டு விலகுகிறார்கள். சிலர் தற்கொலை செய்து கொள் கிறார்கள்.

அண்மையில் உலகின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் பயின்று உயர்ந்த பட்டங்களைப் பெற்றிருந்த விபின் பி. வீட்டில், பேராசிரியர் பதவியிலிருந்து விலகியதோடு, ஜாதிப் பாகுபாடு நடப்பதாக குற்றம்சாட்டியிருந்தார். இது குறித்து பட்டியலின பிற்படுத்தப்பட்டோர் அடங்கிய குழு விசாரணை நடத்த வேண்டும் என்றும் வற்புறுத்தி இருந்தார்.

தொடர்ந்து நீடித்து வரும் இந்த பாகுபாடுகளுக்கு எதிராக தீண்டாமை ஒழிப்பு முன்னணி ஒருங்கிணைத்த ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் இணைந்து பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. சென்னையில் காலை 10.30 மணியளவில் அய்.அய்.டி. வளாகம் அருகே ஆர்ப்பாட்டம் நடந்தது.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன், சென்னை மாவட்டக் கழக உறுப்பினர்கள் இரா. உமாபதி, வேழவேந்தன், மயிலை சுகுமார், விழுப்புரம் அய்யனார் உள்ளிட்ட 30 தோழர்கள் பங்கேற்றனர். தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பாக அதன் தலைவர் சாமுவேல் மற்றும் சாமிநாதன், எஸ்.எஃப்.அய். மாநில செயலாளர் சந்துரு உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட தோழர்கள் கண்டன முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். கழக சார்பில் விழுப்புரம் அய்யனார் கண்டன உரையாற்றினார்.

பின்னர் அய்.அய்.டி. வளாகத்தில் தலைமைக் கழக செயலாளர் தபசி குமரன், தீண்டாமை ஒழிப்பு முன்னணித் தலைவர் சாமுவேல், சாமிநாதன் ஆகியோர் பதிவாளர் மற்றும் 'டீன்' அய் சந்தித்து கோரிக்கை மனுவை அளித்தனர்.







# அய்.அய்.டி மனுவாத கும்பலின் கோட்டை

கல்விக்காக ஒதுக்கும் நிதியில் 60 விழுக்காடு நிதியை விழுங்கிக் கொண்டிருக்கின்றன அய்.அய்.டி உயர் கல்வி நிறுவனங்கள். ஆனால் இந்த நிறுவனங்களில் மனுசாஸ்திரம் தான் சட்டமாக இருக்கிறது. சனாதனக் கும்பலின் சதிகள் தான் இங்கே தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அண்மையில் 'விபின் புதியாவ் வீட்டில்' என்ற பேராசிரியர் சென்னை அய்.அய்.டியில் ஜாதிய பாகுபாடுகள் தாண்டவமாடுகின்றன என்று கூறி தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். தனது விலகல் கடிதத்தில், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் குழு ஒன்றை அமைத்து அய்.அய்.டி யில் நிலவும் ஜாதிய பாகுபாடுகளை கண்டறிய வேண்டும்' என்று அவர் வலியுறுத்தியுள்ளார். 2019 ஆம் ஆண்டு சென்னை அய்.அய்.டி க்கு படிக்க வந்த பாத்திமா லத்தீஃப் என்ற இஸ்லாமிய மாணவி மத பாகுபாடுகளுக்கு உள்ளாகி துன்புறுத்தப்பட்டதால் விடுதியிலேயே தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். எழுதி வைத்திருந்த கடிதத்தில் 'சுதர்சனம் பத்மநாபன்' என்ற பேராசிரியர் தன்னை மத ரீதியாக துன்புறுத்தியதாக குற்றம் சாட்டி இருந்தார். அந்த பேராசிரியர் மீது சென்னை கோட்டூர்புரம் காவல்துறை வழக்கு பதிவு செய்தது. ஆனால் வழக்கு விசாரணை அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

சுதர்சனம் பத்பநாபன் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தீவிர ஆதரவாளர். சென்னை அய்.அய்.டி-யில் அம்பேத்கர் பெரியார் படிப்பு வட்டத்திற்கு நிர்வாகம் தடை போட்டது.

அதே நேரத்தில் ஆர்.எஸ்.எஸ் உருவாக்கிய பல்வேறு படிப்பு வட்டங்கள் அனுமதிக்கப்பட்டன.

சைவ, அசைவ மாணவர்கள் ஒரே இடத்தில் உணவு சாப்பிடுகின்ற முறை இருந்தது. அதை சைவத்திற்கு வேறு இடம், அசைவத்திற்கு வேறு இடம் என்று மாணவர்களை கூறு போட்டது சென்னை அய்.அய்.டி நிர்வாகம். மாட்டுக்கறி சாப்பிட்டார்கள் என்று கூறி அய்.அய்.டி மாணவர்கள் கொடூரமாக தாக்கப்பட்ட சம்பவமும் அங்கே நடந்தது.

அய்.அய்.டி நிகழ்ச்சிகளில் தமிழ்வாழ்த்து எப்போதும் பாடப்படுவது இல்லை. சமஸ்கிருதப் பாடல் தான் அங்கே பாடப்பட்டு வருகிறது. இட ஒதுக்கீடு கொள்கையும் முழுமையாக அங்கே பின்பற்றப்படவில்லை நாடாளுமன்றத்திலேயே ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் 'ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க்' அளித்த பதிலில், இது அம்பலமானது.

'டெக்கான் கிரானிக்கல்' நாளேட்டில் (ஜூலை 4, 2021) பாபு ஜெயக்குமார் எழுதிய கட்டுரையில் சில தகவல்களை பதிவு செய்துள்ளார். பாத்திமா லத்தீப் என்ற மாணவி, அய்.அய்.டி. பெண்கள் விடுதியில் தூக்கிட்டு தற்கொலை செய்தபோது ஒரு பத்திரிகை புகைப்படக்காரர் விடுதியை படம் பிடிக்க முயன்றார். உடனே அய்.அய்.டி. பேராசிரியர் ஒருவர், காவலாளிகளுடன் திரண்டு வந்து, பத்திரிகை யாளரைக் கடுமையாகத் தாக்கினார். கோட்டூர்புரம் காவல்துறையில் புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை. பத்திரிகைகாரர்கள் கோட்டூர்புரம் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். பேராசிரியரைக் காப்பாற்ற முயன்ற நிர்வாகம், சில மாணவிகளை காவல் நிலையத்துக்கு திரட்டி வந்து பத்திரிகையாளர் தங்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக புகார் தந்தது.

- அய்.அய்.டி.களில் ஜாதிய பாகுபாடுகள் குறித்து பல ஆங்கில நூல்கள் வெளி வந்திருக்கின்றன. பாரீஸ் பல்கலைக்கைச் சார்ந்த ஒடில் ஹென்றி என்ற பெண் பேராசிரியர் அய்.அய்.டி.களில் இடஒதுக்கீடு முறைகள் குறித்து ஆய்வு செய்து கொண்டிருந்தார். கான்பூர் அய்.அய்.டியில் அவர் ஆய்வு நடத்த அனுமதிக்காமல் நிர்வாகம் பாதியிலேயே அனுமதி மறுத்து விட்டது. ரோகித் வெமுலா (அய்தராபாத் பல்கலையில் ஜாதிக் கொடுமையால் தற்கொலை செய்து கொண்ட மாணவர்) மரணம் குறித்து ஒரு விவாதத்தில் பங்கேற்றார் என்பதற்காக அவருக்கு ஆய்வு

(4ஆம் பக்கம்)

## 'உபா' கொடும் சட்டத்துக்கு பலியானார், 84 வயது ஸ்டேன் பாதிரியார்



'உபா' எனும் (UAPA) கொடூரமான அடக்குமுறை சட்டத்துக்கு ஸ்டேன் சுவாமி உயிர்ப்பலியானார். அவருக்கு 83 வயது. தமிழ்நாட்டைச் சார்ந்த இவர், ஜார்கண்ட் பழங்குடியின மக்களின் உரிமைகளுக்காகப் போராடினார். 'மாவோயிஸ்ட்' என்று குற்றம் சாட்டி ஒன்றிய ஆட்சி 'பீமா கொரே கான்' வழக்கில் இணைத்தது. 'பர்க்கின்சன்' நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர், கைகள் நடுக்கத்தால் குவளையைப் பிடித்து தண்ணீர் குடிக்க முடியாது. அதற்கு உறிஞ்சு குழல் (ஸ்ட்ரா) வழங்குமாறு அவர் விடுத்த கோரிக்கையை சிறை நிர்வாகம் ஏற்க மறுத்தது. நீதிமன்றம் போய் பல மாதங்கள் கழித்து இந்த 'உறிஞ்சும்' குழலைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற்றார். 'உபா' சட்டத்தில் இடம் பெற்றுள்ள 'பிணை' மறுப்பு பிரிவுகளை எதிர்த்து சிறையிலிருந்தபடியே நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். உடல் மோசமான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மரணத்தைத் தழுவினார்.

பழங்குடி மக்களுக்காக 83 வயது முதியவர் போராடுவதே 'பயங்கரவாதம்' என்கிறது ஒன்றிய அரசு. இது ஜனநாயக நாடு தானா? இத்தகைய 'ஆள் தூக்கி' சட்டங்கள் தொடரலாமா?

('உபா' கொடூரம் – உள்ளே 2ஆம் பக்கம்)

தலையங்கம்

## ‘நீட்’ எதிர்ப்பை மக்கள் இயக்கமாக்குவோம்!

தமிழ்நாட்டில் ‘நீட்’ தேர்வுகள் உருவாக்கும் ‘தாக்கம்’ குறித்து ஆராய தி.மு.க. ஆட்சி, முன்னாள் நீதிபதி ஏ.கே. ராஜன் தலைமையில் குழுவை அமைத்து ஆராய்ந்து வருகிறது. குழுவின் அறிக்கை இன்னும் தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்படாத நிலையில் குழுவின் நியமனத்தை இரத்து செய்ய வேண்டும் என்று தமிழக பா.ஜ.க.வின் மாநிலப் பொறுப்பிலுள்ள கரு. நாகராஜன் என்பவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். தேசிய மருத்துவ கவுன்சில் என்ற அமைப்பை தேசிய மருத்துவ ஆணையமாக மாற்றி 2020இல் ஒன்றிய ஆட்சி சட்டமாக்கி மருத்துவக் கல்வி தொடர்பான உரிமைகளை தன் வசமாக்கிக் கொண்டு விட்டது. மாநில அரசு உருவாக்கிய மருத்துவக் கல்லூரிகளையே தகுதி நீக்கம் செய்யும் அதிகாரம் மிக்க ஆணையமாக மாற்றியிருக்கிறது. இப்போது தமிழ்நாடு அரசு நியமித்திருக்கும் ஏ.கே. ராஜன் தலைமையிலான குழுவை நியமிப்பதற்குக்கூட இந்த ஆணையத்தை கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று இப்போது பா.ஜ.க. பொறுப்பாளர் தாக்கல் செய்த மனு கூறுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு, ஒன்றிய அரசு திணிக்கும் ஒரு ‘தேர்வுத் திட்டத்தை’ பரிசீலிக்கும் உரிமைகூட கிடையாது என்பது ஒன்றிய ஆட்சியின் எதேச்சாதிகார வெளிப்பாடு ஆகும்.

தமிழ்நாடு தனக்கான சமூகநீதிக் கல்விக் கொள்கையை நீதிக்கட்சி ஆட்சியில் தொடங்கி - காமராசர் ஆட்சி காலத்திலும் ‘திராவிட’ ஆட்சி காலத்திலும் உருவாக்கி அதை வளர்த்தெடுத்து வருகிறது. இடஒதுக்கீடு, உள் இடஒதுக்கீடு, இலவசக் கல்வி, சத்துணவு, இலவச மிதிவண்டி, இலவச பாட நூல், இலவச கணினி, உதவித் தொகை, இலவசப் பேருந்து, இலவச சீருடை போன்ற பல்வேறு கட்டமைப்புகளோடு விளிம்பு நிலை மக்களை முன்னிறுத்தி உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கை. இது ஒன்றிய அரசு உருவாக்கிய எந்தக் கல்விக் கொள்கையையும் தமிழ்நாடு கண்மூடி ஏற்காமல், தனக்கான தனித்துவத்தோடு பயணித்து இந்தியாவுக்கே வழிகாட்டி நிற்கும் நாடாக உயர்ந்து நிற்கிறது.

1968ஆம் ஆண்டில் தான் முதன்முதலாக ஒன்றியத்துக்கான கல்விக் கொள்கை கோத்தாரி குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. கோத்தாரி ஆணையம் கல்வி, மாநில உரிமைப் பட்டியலில்தான் இடம்பெற வேண்டும் என்று உறுதியாக அறிவித்ததோடு, ஒத்திசைவுப் பட்டியலுக்கு (Concurrent List) கொண்டு செல்லலாம் என்று குழு உறுப்பினர் இருவர் முன் வைத்த கருத்தையும் ஏற்க மறுத்துவிட்டது. கல்வித் துறையை கூறுபோட்டு விடக் கூடாது என்று உறுதியாகத் தெரிவித்தது கோத்தாரி ஆணையம். (We are not in favour of fragmenting education and putting one part in the concurrent and the other in the State list. The position given to education in the constitution (that is in the state list) is probably the best)

கோத்தாரி ஆணையப் பரிந்துரைக்கு மாறாகத்தான் அவசர நிலை காலத்தில் 1976 இல் கல்வியை பொதுப் பட்டியலுக்கு கொண்டு சென்றார், அன்றைய பிரதமர் இந்திரா காந்தி. 1986 இல் ராஜீவ் பிரதமராக இருந்தபோது இரண்டாவது ஒன்றிய அரசு கல்விக் கொள்கை வந்தது. அந்தக் கொள்கை ‘நவோதயா’ கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. பெரியார் இயக்கங்கள் அதை எதிர்த்து தீவிரமான பரப்புரை செய்து போராட்டங்கள் நடத்தி தமிழகத்தில் நுழைய முடியாமல் தடுத்து நிறுத்தியது. மூன்றாவது கல்விக் கொள்கையான கஸ்தூரிரங்கன் குழு பரிந்துரையை பா.ஜ.க.வின் ஒன்றிய ஆட்சி மாநிலங்களின் உரிமைகளை சட்டப்பூர்வமாகப் பறித்து வைத்துக் கொண்டு திணித்துக் கொண்டிருக்கிறது. இதற்காகவே பல்கலைக்கழக மான்யக் குழுவை கலைத்து விட்டு ‘உயர் கல்வி ஆணையம்’ என்ற அமைப்பையும், ‘மருத்துவக் குழு’ என்ற அமைப்பைக் கலைத்து விட்டு, ‘மருத்துவ ஆணையம்’ என்ற அமைப்பையும் சட்டத்தின் வழியாக உருவாக்கியிருக்கிறது.

1984 இல் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் தான் கிராமப்புற மாணவர் கல்வி உரிமைகளைத் தடுக்கும் நுழைவுத் தேர்வு வந்தது. கல்விக் கொள்கையில் இது மிகப் பெரும் ‘சறுக்கல்’. 2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு முதல்வர் கலைஞர், கல்வியாளர் அனந்த கிருட்டிணன் தலைமையில் ஒரு குழுவை நியமித்து, அதன் பரிந்துரை அடிப்படையில் நுழைவுத் தேர்வுக்கு எதிராக சட்டம் இயற்றி குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்றார்.

2010 இல் நுழைவுத் தேர்வு ‘நீட்’ என்ற பெயரில் அன்றைய காங்கிரஸ் தலைமையிலான அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி கொண்டு வந்தபோது நாடாளுமன்ற நிலைக் குழு அதை பரிசீலித்து விரும்பாத மாநிலங்களுக்கு விதிவிலக்கு தரவேண்டும் என்று பரிந்துரைத்தது. 3 ஆண்டுகளுக்குப் பிறகு நீட்டை எதிர்த்து வந்த வழக்கில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அல்டமாஸ் கபீர் தலைமையிலான மூன்று நீதிபதிகளடங்கிய அமர்வு ‘நீட்’ டை இரத்து செய்தது. அனில் தவே என்ற பார்ப்பன நீதிபதி மட்டும் ‘நீட்’ வேண்டும் என்றார். நீட்டை இரத்து செய்த நீதிபதிகள், பதவி ஓய்வுக்காகக் காத்திருந்த மருத்துவக் கவுன்சில் மூன்றாண்டுகளுக்குப் பிறகு வழக்குக்கு உயிர் கொடுக்க சதித் திட்டம் தீட்டியது.

நீட்டை ஆதரித்து தீர்ப்பு வழங்கிய அனில் தவே அமர்வு முன் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டது. ஏற்கனவே நீட்டை இரத்து செய்த தீர்ப்புக்கு தடை போட்டது அணில் தவே அமர்வு. இவர்தான் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் ஓட்டை போடும் தீர்ப்பை வழங்கியவர். பிறகு இந்தத் தீர்ப்பை மாற்றியமைக்க சட்டத் திருத்தம் கொண்டு வரும் நிலை உருவானது. பெண்களுக்கு எதிரான வரதட்சணை தடுப்புச் சட்டத்தையும் இவர் நீர்த்துப் போக வைத்தவர். தான் மட்டும் சர்வாதிகாரியாக இருந்தால் பகவத் கீதையை அனைவரும் படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தி உத்தரவிட்டிருப்பேன் என்று இறுமாப்போடு பேசிய ‘மனு சாஸ்திர’ வாதி இந்த நீதிபதி.

தொடர்ந்து ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி, 2016 இல் மே 25ஆம் தேதி ‘நீட்’டை திணிக்கும் அவசரச் சட்டத்தையும், 2016ஆம் ஆண்டு ஜூலை 18 இல் நாடாளுமன்றத்தின் சட்டம் வழியாக அனைத்து மாநிலங்களிலும் ‘நீட்’டை கட்டாயப்படுத்தியது. விதிவிலக்குக் கோரி தமிழக சட்டமன்றம் ஒருமித்து நிறைவேற்றிய தீர்மானத்தையும் குப்பைக் கூடையில் வீசி விட்டார்கள்.

இப்போது சட்டத் தடைகளை நீக்கும் முயற்சிகளில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள தி.மு.க., மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டைப் போடுகிறது பா.ஜ.க. பல்வேறு இயக்கங்கள், கட்சிகள் வழக்கில் தமிழக அரசுக்கு ஆதரவாக தங்களையும் இணைத்துக் கொள்ள முன் வந்திருப்பது - தமிழ்நாட்டின் ஒருமித்த உணர்வுகளைப் பிரதிபலிக்கிறது. ‘நீட்’ எதிர்ப்புக்கான மக்கள் இயக்கங்களை உருவாக்கி மனுவின் வாரிசுகளை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்திடும் முயற்சியில் இறங்குவதே சரியான பதிலடியாக இருக்கும். அதற்கான பரப்புரையை தீவிரப்படுத்த ஆயத்தமாவோம்!

## ஆண்டுக்கணக்கில் சிறையில் முடக்குவதே ‘உபா’ சட்டத்தின் நோக்கம்

ஆட்சியை விமர்சித்தால் அரசு துரோகமாகிவிடுகிறது; உபா (UAPA) சட்டம் 124ஏ பாய்கிறது. சட்டத்தில் கைது செய்து விட்டாலே நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவதற்கு முன்பே சிறை தண்டனை தொடங்கி விடுகிறது. நீதிபதிகள் ‘பிணை’ வழங்கும் உரிமைகளைக்கூட சட்டம் மறுக்கிறது. அந்நிய ஆட்சியாளர்களால் கொண்டு வரப்பட்ட சட்டம், ‘சுதந்திர பார்ப்பன இந்தியா’வில் இதைப் பயன்படுத்தும் வீதம் ஆண்டுதோறும் அதிகரிக்கிறது. 2016இல் 35 பேர் மீது பாய்ந்த இந்த சட்டம், 2018இல் 70 பேர் மீதும், 2019இல் 93 பேர் மீதும் பாய்ந்துள்ளது.

விவசாயிகள் போராட்டத்தை ஆதரித்து எழுதிய சுற்றுச்சூழல் ஆர்வலர் 27 வயதே நிரம்பிய திஷா ரவி மீதும் பத்திரிகையாளர்கள் மீதும் இந்த சட்டம் பாய்ந்திருக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச் செயலை நம்புவதற்கு அடிப்படை ஆதாரம் இருக்கிறது. அடிப்படை ஆதாரங்களில் உண்மை இருக்கிறது என்ற வாசகங்களை குற்றப் பத்திரிகையிலோ, வழக்கு டைரியிலோ சேர்த்து விட்டால் போதும், நீதிபதிகள் நினைத்தாலும் பிணை வழங்க முடியாது. வழக்கு விசாரணைகளும் துரிதப்படுத்துவது இல்லை.

தேசிய குற்றப் புலனாய்வு அமைப்பு தெரிவிக்கும் தகவல்கள் அதிர்ச்சி அளிக்கின்றன. 2016லிருந்து 2019 வரை இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டோர் 5,922 பேர். ஆனால் சட்டம் முறை கேடாகவே பயன்படுத்தப்படுகிறது. தண்டிக்கப்பட்டவர்கள் 132 பேர் மட்டுமே.

2019ஆம் ஆண்டு தொடக்கத்தில் விசாரணைக்காகக் கிடப்பில் இருந்தவை 3908. அதற்கு முன்பே கைது செய்யப்பட்டு சிறையில் இருந்து வரும் இவர்களில் 257 பேர் மீது மட்டுமே. 2019இல் புலனாய்வுத் துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இதற்கிடையே 2019ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து நீதிமன்றம் வரை வந்த 1878 வழக்குகளில் 485 வழக்குகள் மட்டுமே விசாரணைக்கு வந்தன. 113 வழக்குகளை மட்டுமே விசாரித்து முடித்த நீதிமன்றம். அதில் குற்றவாளிகள் என்று உறுதி செய்தது. 29 சதவீத வழக்குகளில் மட்டும் தான். 71 சதவீதம் பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டு பிணை மறுத்து, சிறைச்சாலைகளில் ஆண்டுக் கணக்கில் அடைத்து வைப்பதற்கே இந்தச் சட்டம் பயன்படுத்தப் படுகிறது. இந்தியாவின் ‘குடிமகன்’, தேசத் துரோகியாக்கப்பட்டு, ‘தேச பக்தனாக’ நிரூபிக்க இவ்வளவு விலை தர வேண்டியிருக்கிறது.

## வினா விடை

- கலைஞர், இந்தியாவை ‘இந்தியப் பேரரசு’ என்று பலமுறை குறிப்பிட்டுள்ளார். ‘ஒன்றியம்’ என்று கூறுவது தவறு.

  **- ஓ. பன்னீர்செல்வம்**

  ‘இந்தியப் பேரரசு என்றாலே மாநிலங்களை அடிமைகளாக்கி ‘கப்பம்’ கட்டச் சொல்லும் பேரரசர் அரசு என்பது தான் அதன் அர்த்தம். இது ஒன்றியத்தை இன்னும் இழிவுபடுத்தும் சொல், பன்னீர் ஜீ!

- காவிரி நீரை தமிழ்நாடு வீணாக்குகிறது; சரியாகப் பயன்படுத்துவது இல்லை.

  **- மோடியிடம் பா.ஜ.க. முருகன் புகார்**

  ஒழுங்காகப் பயன்படுத்த தவறியதால் தமிழகத்துக்கு தண்ணீர் விடக் கூடாது என்று ஒரு வழக்கையும் போடுங்க. மக்கள் கொண்டாடுவாங்க.

- கபாலீசுவரர் கோயில் இடத்தை ஆக்கிரமித்த மயிலாப்பூர் கிளப்பில் உள்ள ‘மதுபான’ பார், அறநிலையத் துறை அமைச்சர் இழுத்து மூட உத்தரவு.

  **- செய்தி**


  கிளப்பின் தலைவர் பிரமிட் நடராஜன் என்ற பா.ஜ.க. பார்ப்பனர். ஆக, சேகர் பாபு ‘இந்து விரோதி’யாகி விட்டார்.

- திருப்பதி முறுக்கு, ஜிலேபி உள்ளிட்ட பிரசாதம் பல மடங்கு விலை உயர்வு.

  **- செய்தி**

  திருப்பதியில் விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராடலாமே! ஏழுமலையான் பரிசீலிப்பார்.

## ‘அஞ்ஞானம்’ என்றால்...



ஞானம் என்றால் அறிவு என்று பொருள்; அஞ்ஞானம் என்றால் (பகுத்து அறியும்) அறிவற்ற தன்மை என்று பொருள். இன்றைய மக்களாகிய நாம் பெரும்பாலோர் (பகுத்தறிவற்ற) அஞ்ஞானிகளே யாவோம். இதன் காரணம், இயற்கைத் தன்மையைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல், இயற்கைக்கு மாறுபாடான கடவுள், மதம், தெய்வீக முன்னோர் கண்ட முடிவு என்பனவாகியவற்றிற்கு அடிமைகளாகிவிட்ட காரணத்தால் மெய்ஞ்ஞானம் என்பது நம்மை அணுகாமலே போய் விட்டது.

மெய்ஞ்ஞானம் அஞ்ஞானம் என்ற சொற்களுக்கு உண்மையான பொருள் என்னவென்று பார்த்தால் மெய்ஞ்ஞானி கவலை அற்றவனாகவும், அஞ்ஞானி கவலை கொண்டவனாகவுமே இருப்பான் என்பது தான். கவலை என்பதன் பொருள்-பேத நிலை.

கவலையற்ற என்பதன் பொருள் - பேதமற்ற (அபேத) நிலை என்பதேயாகும்.

**- விடுதலை 21.09.1964**

# பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை

## தமிழ்நாடு இழந்த உரிமைகள்: ஒரு சுருக்கமான வரலாறு (1)

**விடுதலை இராசேந்திரன்**

*கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைத்து ஒற்றை ஆட்சியை நோக்கிச் செல்லும் ஆபத்துகள் அரங்கேறி வருகின்றன. சட்டத்தில் இடம் பெற்றுள்ள 'ஒன்றியம்' என்ற சொற்றொடரே மனுவாதிகளுக்கு கசக்கிறது. இந்தப் பின்னணியில் பிரிட்டிஷ் இந்தியா தொடங்கி மோடி ஆட்சி வரை நடந்த மாநில உரிமைகள் தொடர்பான சுருக்கமான வரலாற்றுப் பதிவே இக்கட்டுரை.*

கி.பி.1600இல் பிரிட்டனின் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவுக்குள் வணிகம் செய்ய வருவதற்கு முன்பு, 'இந்தியா' என்ற ஒரு நாடே உருவாகவில்லை. பிரிட்டிஷ் அரசி எலிசபெத் அதற்கான சட்டபூர்வ உரிமையை கிழக்கிந்திய கம்பெனிக்கு வழங்கியிருந்தார். கடற்கரை ஓரப் பகுதிகளில் வணிகத்தை கம்பெனி தொடங்கியது. முதலில் சூரத் (கி.பி.1613), பின்னர் வரிசையாக மசூலிப்பட்டினம் (1616), அரிகரிபூர் (1633), சென்னை (1640), பம்பாய் (1669), கல்கத்தா (1686) என வணிகத்துக்கான குடியேற்றங்களைத் தொடங்கிய கம்பெனி, ஒரு கட்டம் வரை வணிகத்தில் மட்டுமே கவனம் செலுத்தியது. பிறகு தாக்குதல்கள் வழியாக பல்வேறு பகுதிகளை மீட்கத் தொடங்கியது. முதல் தாக்குதல் நடந்த பகுதி சிட்டகாங் (1686).

ஆட்சியிலிருந்த மன்னர் அவுரங்கசீப், பிரிட்டிஷ் படையை தோற் கடித்ததோடு, ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்தே விரட்ட ஆணையிட்டார். இந்தியாவின் பெரும் பகுதியை தனது குடைக்குக் கீழே கொண்டு வந்து ஆட்சி நடத்திய ஒரே மன்னர் அவுரங்கசீப் தான். பிரிட்டிஷாரை எதிர்த்துப் போரிட்டு தோற்கடித்த முதல் மன்னனும் அவுரங்கசீப் தான். கி.பி.1707இல் அவுரங்கசீப் முடிவெய்தியவுடன் அவரது பேரரசு சிதைந்தது. ஒற்றைத் தலைமை இல்லா சூழ்நிலை கம்பெனிக்கு சாதகமானது. பிரிட்டிஷ் அதிகாரி ராபர்ட் கிளைவ் ஆற்காட்டைப் பிடித்தார் (1749). அடுத்த 12 ஆண்டுகளில் தென்னிந்தியாவில் பல போர்களை நடத்தி தங்கள் வசமாக்கிக் கொண்ட கம்பெனி, 1758இல் நடந்த பிளாசி சண்டையில் கருநாடகம், வங்கத்தையும் பிடித்தது. இந்த வெற்றி தான் இந்தியாவில் ஆங்கிலப் பேரரசுக்கான அடித்தளம். பிளாசிப் போருக்குப் பிறகு ஒரு நூற்றாண்டில் இந்தியா முழுமையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டது.

3000 ஆண்டுகால வரலாற்றில் உருவாக முடியாத இந்திய ஒற்றுமை, ஆங்கிலேயரின் துப்பாக்கி முனையால் தான் உருவாக்கப்பட்டது என்கிறார், வரலாற்று ஆய்வாளர் கே.எம். பணிக்கர். தொடர்ந்து கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரங்களை, மெல்ல மெல்லப் பறித்து வந்த பிரிட்டிஷ் ஆட்சி, 1858இல் இந்தியாவின் ஆட்சி நிர்வாகம் முழுவதையும் தன்னிடம் எடுத்துக் கொண்டது. அந்த 'இந்தியா'வுக்குள் இன்றைய ஆப்கானிஸ்தான் நாட்டின் பெரும் பகுதியும், நேபாளம், பூட்டான், பர்மா, இலங்கையும் அடங்கியிருந்தன.

கிழக்கிந்திய கம்பெனி கட்டுப்பாட்டில் ஆட்சி நிர்வாகம் இருந்த காலத்திலேயே சென்னை, பம்பாய், கல்கத்தாவை தலைநகராகக் கொண்ட மூன்று மாகாண அமைப்புகளும், கல்கத்தாவில் தலைமை நீதிமன்றமும் அமைக்கப்பட்டது. இதில் கவனிக்கத்தக்க ஒரு வரலாறும் உண்டு. அவுரங்கசிப் மறைவிற்குப் பிறகு 72 ஆண்டுகள் (கி.பி.1779 வரை) இந்தியா முழுவதையும் நிர்வகிக்கும் ஒரு மத்திய அரசு உருவாகவே இல்லை.

ஆங்கிலேயரின் நேரடி கட்டுப்பாட்டிற்கு வந்த பிறகு மாகாணங்களாக, சிற்றரசர்களாக, குறுநில மன்னர் ஆட்சிகளாக நடந்த தன்னாட்சி அதிகார அமைப்பைக் குலைத்து விடாமல், மய்ய அரசு நிர்வாகம் ஒன்றை, ஆங்கிலேயே அரசு இலண்டனில் உருவாக்கியது. "இந்தியா"வில் மாகாணங்களில் ஆளுநர்களும் (கவர்னர்) இவர்களைக் கட்டுப்படுத்த சர்வ அதிகாரமுள்ள கவர்னர் ஜெனரலும் அவரது தலைமையில் குழுக்களும் உருவாக்கப்பட்டன. சொல்லப் போனால் இன்றைய நடுவண் ஆட்சி முறைக்கு இது முதல் வித்து. இந்த நிர்வாக அமைப்பைக் கண்காணிக்க மேலும் கூடுதல் அதிகாரங்களோடு இங்கிலாந்தில் இந்திய நாட்டுக்கான அரசுச் செயலர் குழு ஒன்று (Secretary of State for India in Council) உருவானது.

இந்த நிர்வாகக் கட்டமைப்பு வெற்றிகரமாக செயல்பட்டதா என்ற கேள்விக்கு பதில் இல்லை என்பதுதான். மாகாணங்களின் உரிமைகளை படிப்படியாக பறிக்கும் சட்டங்களை 1789, 1793, 1813, 1833 ஆண்டுகளில் கொண்டு வந்தார்கள். மாகாணங்களின் உள்ளாட்சி அதிகாரம், நிதி, பொருளாதார திட்டங்கள் உள்ளிட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. மாகாண ஆட்சிகளுக்கும் கவர்னர் ஜெனரலுக்கும் முரண்பாடுகள் வெடித்தன. 'மலர்க மாநில சுயாட்சி' என்ற மிகச் சிறந்த வரலாற்று ஆவணத்தை எழுதிய கு.ச. ஆனந்தன் தனது நூலில் இவ்வாறு பதிவு செய்கிறார்:

"அந்தக் காலகட்டத்தில் மாகாணங்கள் மொழி அடிப்படையிலோ அல்லது அதனதன் தனித் தன்மையை நிலைநாட்டும் வகையிலோ பிரிக்கப்பட்டிருக்கவில்லை. அந்தந்த மாகாண மக்களின் கருத்தை எதிரொலிக்கும் 'சட்டசபைகள்' பற்றி மக்களுக்குத் தெரியாத காலம் அது. குடியரசு முறையே இந்தியாவில் உருவாகவில்லை. ஆள்பவர்களுக்கும் ஆளப்படுகிறவர்களுக்கும் தொடர்பே இல்லாத சூழ்நிலை. அந்த நிலையில்கூட ஓர் அனைத்திந்திய மய்ய அரசாங்கத்தின் வல்லாட்சியை மாகாணங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். இந்த நிலையில் விடுதலை பெற்ற இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தின் மூலமாய் அவ்வகை மத்திய வல்லாட்சியை மொழி சார்ந்த தனி மாநிலங்கள் மீது திணித்திடத்தான் முடியுமோ"

- *மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்க முயன்ற பிரிட்டிஷ் ஆட்சி, அவ்வப்போது எழுந்த எதிர்ப்புகளுக்கு செவிசாய்த்து வந்தது.*
- *1773இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் கொண்டு வந்த 'ஒழுங்கு முறை'ச் சட்டம் தான் முதல் உரிமைப் பறிப்பு.*
- *1861இல் எதிர்ப்புகளுக்கு பணிந்து பறிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் மாகாணங்களுக்கு வழங்கியது 'பிரிட்டிஷ்' ஆட்சி.*
- *1907இல் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க 'இராயல் ஆணையம்' என்ற அமைப்பையும் உருவாக்கியது.*

2

### பிரிட்டிஷ் 'இந்தியா'வில்

பார்ப்பன-பனியாக்களின் சுரண்டலுக்கு கதவு திறந்துவிட்ட இந்தியாவின் சுதந்திர ஆட்சி, படிப்படியாக மாநில மக்களின் உரிமைகளையும் அடையாளங்களையும் வளங்களையும் பறித்துக் கொண்டே இருந்தது; இருக்கிறது. தேசிய இனங்களின் உரிமைக் குரல் போராட்டங்களாக உருவெடுத்தாலும் அந்த உணர்வுகளை மதிப்பதற்கு ஆளும் வர்க்கமான பார்ப்பன-பனியாக்களின் பிரதிநிதிகளாக செயல்படும் அகில இந்திய தேசியக் கட்சிகள் தயாராக இல்லை. ஆனால், **வணிக நோக்கத்தோடு சுரண்டல் இலாபங்களுக்காக இந்தியாவை காலனியாக்கிய பிரிட்டிஷ் ஆட்சி, மாகாணங்களின் உரிமைகளைப் பறித்தாலும், அவ்வப்போது எழுந்த எதிர்ப்புகளுக்கு முகம் கொடுத்து வந்திருக்கிறது. அதிகாரப் பறிப்புகளுக்கிடையே உரிமைக் குரல்களுக்கும் காது கொடுத்திருக்கிறது, என்பதே வரலாறு.**

கிழக்கிந்திய கம்பெனி, நிர்வாக வசதிக்காக சென்னை, பம்பாய், கல்கத்தா என்ற மூன்று மாகாணங்களை உருவாக்கியதை ஏற்கனவே குறிப்பிட்டோம். இந்த மூன்று மாகாணங்களும் தங்களுக்கான சட்டங்களை இயற்றலாம். இலண்டனில் உள்ள கம்பெனியின் தலைமை நிலையத்துக்கு மட்டுமே கட்டுப்பட வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சி நாடாளுமன்றம் வழியாக முதல் உரிமைப் பறிப்பில் இறங்கியது. அதுதான் 1773இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் கொண்டு வந்த ஒழுங்குமுறைச் சட்டம் (Regulating act) இந்தச் சட்டத்தின் வழியாக பம்பாய், சென்னை மாகாணங்கள் கல்கத்தா மாகாணத்தின் அதிகார வரம்புக்குள் கொண்டு வரப்பட்டன. கல்கத்தா மாகாண கவர்னர், கவர்னர் ஜெனரல் ஆக்கப்பட்டார். பம்பாய், சென்னை மாகாண கவர்னர்கள், கல்கத்தா கவர்னர் ஜெனரல் அதிகாரத்துக்கு அடங்கிப் போக வேண்டும். அப்போதே சென்னை, பம்பாய் மாகாணங்களில் தங்களின் சட்டம் இயற்றும் உரிமை பறிக்கப்பட்டதற்கு எதிர்ப்புகள் எழத் தொடங்கி விட்டன.

கல்கத்தா அதிகார மய்யமாக மாற்றப்பட்டதை எதிர்த்து பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திலும் குரல்கள் ஒலித்தன. இதன் விளைவாக மத்திய - மாகாண நிர்வாக உறவுகளை ஆராய நாடாளுமன்ற விசாரணைக் குழு ஒன்றை அமைத்து சாட்சியங்களைப் பதிவு செய்தது. குழு அமைக்கப்பட்ட ஆண்டு 1852-53. மாகாண உரிமைகளுக்காக இந்திய வரலாற்றில் அமைக்கப்பட்ட முதல் குழு இது தான். குழுவின் விசாரணைக்குப் பிறகு ஒரு முடிவு எடுக்கப்பட்டது.

கல்கத்தா தலைமை மாகாண கவர்னர் ஜெனரலுடைய நிர்வாகக் குழுவில் பம்பாய், சென்னை மாகாண பிரதிநிதிகளையும் இணைத்துக் கொள்வது என்பதே அந்த முடிவு. கல்கத்தா மத்திய சட்டசபையாக மாற்றப்பட்டிருந்த நிலையில் மாகாண ஆட்சியில் முதன்முறையாக மாகாணங்களுக்கு பங்கேற்பு வழங்கப்பட்டது. பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இப்படி ஒரு முடிவை எடுத்த காலகட்டத்தில் இந்தியா-கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரத்தில்தான் இருந்தது. அதற்குப் பிறகு 5 ஆண்டுகள் கழித்துத்தான் 1858இல் பிரிட்டிஷ் ஆட்சி தனது நேரடி கட்டுப்பாட்டில் 'இந்தியா'வைக் கொண்டு வந்தது. அதைத் தொடர்ந்து மாகாண உரிமைகளுக்கு புதிய வெளிச்சம் தரும் சட்டம் ஒன்றை 1861இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் கொண்டு வந்தது. இதற்குப் பெயர் இந்திய கவுன்சில்கள் சட்டம் (The Indian Councils Act).

இச்சட்டத்தின் வழியாக சென்னை-பம்பாய் மாகாணங்களிடமிருந்து பறிக்கப்பட்டிருந்த சட்டமியற்றும் அதிகாரங்கள் மீண்டும் வழங்கப்பட்டன. அதற்காக மாகாண சட்டசபைகள் (Provincial Legistlative Councils) உருவாக்கப்பட்டன. அகில இந்திய அடிப்படையிலான பொதுப் பிரச்சினைகளுக்கு Imperial - Legislative Council எனும் கவர்னர் ஜெனரலுடைய சபை (கல்கத்தாவை தலைமையகமாகக் கொண்டது) சட்டங்கள் இயற்றும். மாகாணம் தொடர்பான பிரச்சினைகளுக்கு மாகாண சட்டசபைகளே சட்டம் இயற்றும். மாகாணம் என்ற சொல் பயன்படுத்தப்படுவதற்குக் காரணம் - அப்போது மாநிலங்கள் (State) உருவாகவில்லை. Presidency என்ற பெயரில் மாகாணங்கள் மட்டுமே செயல்பட்டன. மாகாண அரசு இயற்றுகிற எந்த சட்டமும் முதலில் கவர்னர் ஒப்புதல்; பிறகு கல்கத்தாவிலுள்ள கவர்னர் ஜெனரல் ஒப்புதல் (அவருக்கு வைஸ்ராய் என்ற பெயரும் உண்டு) அதன் பிறகு இலண்டனில் பிரிட்டிஷ் அரசு ஒப்புதலைப் பெற வேண்டும்.

இங்கிலாந்தில் இந்திய பிரச்சினை களுக்காக ஒரு அமைச்சர் நியமிக்கப்பட்டார் (Secretary of State for India). மாகாண அரசுகளுக்கு நிதி அதிகாரம் ஏதும் கிடையாது. ஒவ்வொரு செலவுக்கும் மத்திய அரசின் அனுமதி பெற்றாக வேண்டும். 1870ஆம் ஆண்டு வரை இதுதான் நிலை. 1871ஆம் ஆண்டு கவர்னர் ஜெனரலாக (வைஸ்ராய்) கல்கத்தா தலைமையகத்துக்கு மேயோ பிரபு வந்தார். அவர் முதன்முறையாக மாகாணங்கள் உரிமைகளின் கீழ் சில துறைகளை மாற்றினார். முதன்முறையாக காவல்துறை, சிறை, கல்வி, பத்திரப் பதிவு, சுகாதாரம், சாலைகள், சிவில் கட்டிடங்கள் தொடர்பான துறைகள் மாகாணங்களிடம் வந்தன. இவற்றை நிர்வகிப்பதற்கு மாகாண அரசு மொத்தமாக ஒரு தொகை மான்யமாக வழங்கப்பட்டது. அந்தத் தொகைக்கு மிகாமல் மாகாண அரசுகள் செலவிட முடியும். அதில் இந்த 7 ஆண்டுகளில் அதாவது 1877இல் மற்றொரு மாற்றம் வந்தது.

கவர்னர் ஜெனரலாக இருந்த லிட்டன் பிரபு நிலவரி, எக்சைஸ், முத்திரை (ஸ்டாம்ப்), பொது நிர்வாகம், சட்டம், நிதித் துறை அதிகாரங்களையும் அதில் கிடைக்கும் வருமானத்தையும் மாகாணங்களுக்கு உரித்தாக்கி, ஏற்கனவே வழங்கி வந்த மான்யத்தை நிறுத்தினார். மாகாணங்களுக்காக வருவாய் தரும் துறைகளை முதன்முதலாக ஒதுக்கியது இப்போதுதான்.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மாட்டுக்கறிக்குத் தடையா? அவிநாசியில் கண்டன ஆர்ப்பாட்டம்



மாட்டுக்கறி உணவுக்கு தடை விதிக்க முயற்சிக்கும் அவினாசி வட்டாட்சியரைக் கண்டித்து, உணவுப் பாதுகாப்புக்கான மக்கள் கூட்டியக்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம். திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ்நாடு மாணவர் கழகம் பங்கேற்பு.

அவினாசி ஒன்றியம், அய்யம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட கானாங் குளத்தில், ஊருக்கு சற்றுத் தள்ளி, பட்டியல் வகுப்பைச் சேர்ந்த வேலுச்சாமி என்பவர் 10 ஆண்டுகளுக்கும் மேலாக, மாட்டு இறைச்சிக்கடையை நடத்தி வருகிறார்.

இந்நிலையில் கடந்த 26.6.2021 (சனி) இரவு சுமார் 9 மணி அளவில், அவினாசி வட்டாட்சியர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள், தனது வாகனத்தில் நேரில் சென்று, மாட்டிறைச்சி விற்பனை செய்யக்கூடாது. புகார் வந்துள்ளது என அச்சுறுத்தும் விதமாகக் கூறுகிறார்.

இந்தக் காணொளி சமூக ஊடகங்களில் பரவியதையடுத்து, தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி முன்னெடுப்பில், திராவிடர் விடுதலைக் கழகம்,ஆதித் தமிழர் பேரவை,தந்தை பெரியார் திராவிடர் கழகம்,தமிழ்நாடு மாணவர் கழகம் உள்ளிட்ட 13 - க்கும் மேற்பட்ட அமைப்புகளை ஒருங்கிணைத்து 28.6.2021) திங்கள் காலை 11 மணிக்கு, அவினாசி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்டத் தலைவர் ஆர். குமார் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில்,திராவிடர் விடுதலைக் கழக மாவட்டச் செயலாளர் முகில் இராசு, தமிழ்நாடு மாணவர் கழகத்தோழர் சந்தோஷ்,ஆதித் தமிழர் பேரவை மாநில துணைப் பொதுச் செயலாளர் அர. விடுதலைச் செல்வன், தந்தை பெரியார் திராவிடர் கழக திருப்பூர் மாநகரச் செயலாளர் சண். முத்துக்குமார், தலித் விடுதலைக் கட்சி நிறுவனர் செங்கோட்டையன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பழ.சண்முகம் உள்ளிட்ட அமைப்புகளின் நிர்வாகிகள் கண்டன உரையாற்றினர்.

மாலையில், மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து கோரிக்கையை வலியுறுத்தி மனு அளிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

**தாசில்தார் பணி இடமாற்றம்:** மாட்டுக்கறி விற்பனைக்கு தடை செய்ய முயன்ற அவிநாசி தாசில்தார் ஊத்துக்குளிக்கு பணி இட மாறுதல் செய்யப்பட்டுள்ளார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நடத்தும் உரிமையை மறுத்து விட்டார்கள்.

- அண்மையில் கான்பூர் அய்.அய்.டி. பேராசிரியர் சீமாசிங் என்னும் ஆங்கில பெண் பேராசிரியர், தலித் மாணவரை ‘கெட்ட வார்த்தை’களால் இழிவாகப் பேசினார். அவர் அப்படிப் பேசியது பதிவு செய்து நிரூபிக்கப்பட்டதால் அவர் ‘சஸ்பென்ட்’ செய்யப்பட்டார்.
- சென்னை அய்.அய்.டி.க்குள் வேளச்சேரி பகுதியில் உள்ள நுழைவு வாயிலை பொது மக்கள் பயன்படுத்தக் கூடாது என்று நிர்வாகம் மூடிவிட்டது. பள்ளிக்கூடம் போவதற்கும், வழிபாட்டு தலங்களுக்கு போவதற்கும் மக்கள் இந்த நுழைவுவாயிலைப் பயன்படுத்தி வந்தார்கள். அவர்களை சமூக விரோதிகள் என்கிறது, சென்னை அய்.அய்.டி. பார்ப்பன நிர்வாகம்.

அய்.அய்.டி முனைவர் பட்ட அனுமதிகளில் ஓ.பி.சி, எஸ்.சி., எஸ்.டி பிரிவினர்க்கான இட ஒதுக்கீட்டில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது . மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் எழுப்பிய கேள்விக்கு மத்திய கல்வித் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் அளித்த அதிர்ச்சியான பதிலில் உண்மைகள் வெளி வந்துள்ளன.

முனைவர் பட்டக் கல்வியில் அனுமதிக்கப் பட்டுள்ள பட்டியல் சாதி, பட்டியல் பழங்குடியினர், இதர பிற்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர் எண்ணிக்கை, அப்பிரிவுகளுக்குரிய இட ஒதுக்கீடுசதவீதங்களை விட மிகக் குறைவாக உள்ளது. இந்தியாவின் 23 ஐ.ஐ.டி களில் மொத்தம் 7186 மாணவர்கள் 2020 ஆம் ஆண்டில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இதில் ஓ.பி.சி மாணவர்கள் 1635 பேர், 707 பேர் பட்டியல் சாதியினர், 321 பேர் பழங்குடியினர் என அப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

21 அய்.அய்.டி.களில் ஒரு பழங்குடி மாணவர்கூட அனுமதிக்கப்படவில்லை என்கிறது ஒன்றிய அரசு தரும் புள்ளி விவரம்.

சென்னை அய்.அய்.டி.யில் பணியாற்றும் 596 பேராசிரியர்களில் தலித் 16 பேர் (2.7 சதவீதம்), பழங்குடியினர் 3 (0.5 சதவீதம்), பிற்படுத்தப்பட்டோர் 62 பேர் (10.4 சதவீதம்), தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்டு ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ நாளேடு 30.6.2021 அன்று வெளியிட்ட தகவல் இது.

# களப்பணிகளில் கழகத் தோழர்கள்



**வீரவணக்கம் :** மேலவளவு ஜாதி ஒழிப்பு போராளிகளின் படுகொலை நாளையொட்டி, மதுரை திவிக சார்பில் மேலூர் திவிக பொறுப்பாளர் சத்திய மூர்த்தி தலைமையில் நினைவிடத்தில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது. கல்மேடு திவிக பொறுப்பாளர் தோழர் பிரபாகரன் நினைவேந்தல் உரையாற்றினார்.

திவிக மதுரை மாவட்டச் செயலாளர் மணியமுதன் மா.பா., புலிப்பட்டி தோழர்கள் மச்ச ராஜா, அம்பேத்கர், கருப்பையா, பிரபு, மலைச்சாமி, திருமங்கலம் திவிக பொறுப்பாளர் மாளவிகா, மேலவளவு விடுதலை சிறுத்தைகள் நிர்வாகி தம்பி பாரதி உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**தூத்துக்குடியில் :** பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக, தமிழ்ப் புலிகள் கட்சியின் தேனி மாவட்ட துணை செயலாளர் கம்பம் திருநாவுக்கரசுவை




கந்துவட்டி, கஞ்சா மற்றும் சாதிய மதவாதிகள் கடந்த 21.06.2021 அன்று 9 பேர் கொண்ட கும்பல் படுகொலை செய்ததைக் கண்டித்தும், அவருடைய படுகொலைக்கு நீதி கேட்டும், அவருடைய நிறைமாத மனைவிக்கு கல்வித் தகுதி அடிப்படையில் அரசு வேலையும், அவருடைய உயிர் இழப்பீடுக்கு 50 லட்சம் நிவாரணமும் , சாதிய வாதிகளின் வன்கொடுமையில் இருந்து அவருடைய குடும்பத்திற்கு உரிய பாதுகாப்பும் வழங்க வேண்டுமென்று தூத்துக்குடி மாவட்ட பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக இன்று காலை 11.00 மணியளவில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன மற்றும் கோரிக்கை முழக்கம் ஆர்ப்பாட்டாம் நடைபெற்றது.

பின்பு மாவட்ட துணை ஆட்சியரிடம் மனு வழங்கப்பட்டது .

ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழக கொள்கை பரப்புச் செயலாளர் பால் பிரபாகரன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

மேலும், தமிழர் விடியல் கட்சி, தூத்துக்குடி மாவட்ட பொறுப்பாளர் சேமா. சந்தனராஜ், கிருபாகரன், டேவிட், தமிழ்ப்புலிகள் கட்சி மாவட்ட செயலாளர் தாஸ், கத்தார் பாலு, வேல்முருகன், சரவணன், கோவிந்த ராஜ், திராவிட தமிழர் கட்சி, மாநில அமைப்பு செயலாளர் - கு.க. சங்கர், தமுமுக, மாவட்ட செயலாளர் - அசன், மனிதநேய மக்கள் முன்னேற்றக் கழகம், மாவட்ட செயலாளர் - முகம்மது ஜான், மாவட்ட தலைவர் - செய்யது சம்சூதீன், மனிதநேய மக்கள் கட்சி, மாநகர செயலார் - பிரவின், அலி அக்பர், SDPI கட்சியின், தூத்துக்குடி தெற்கு மண்டல செயலாளர் - மானா, புரட்சிகர இளைஞர் முன்னணி, மாவட்ட செயலாளர் - சுஜித், தமிழக மக்கள் ஜனநாயக கட்சி, மாவட்ட செயலாளர்- ஜலால் முகம்மது, சுரேஷ் - ஆதித்தமிழர் கட்சி, மாவட்ட செயலாளர் , கண்ணன்-ஆதித்தமிழர் பேரவை, மாவட்ட செயலாளர், அருந்ததி அரசு-ஆதித் தமிழர் பேரவை, முன்னாள் மாநில துணை செயலாளரும், குறும்பட இணை இயக்குநர், காதர் கனி - ஏகத்துவ முஸ்லீம் ஜமாத், மாவட்ட தலைவர் மற்றும் தோழமை இயக்கங்களின் தோழர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049 newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 08th July 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN